**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 71/2019**

**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஜெயபிரகாஷ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. வின்செண்ட்** | **Calling** | : | |
| **Village** | : | **வத்தலக்குண்டு** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **34** |
| | | | **Dated** | : | **22.05.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**A1, A2, A3 and A8 absent, petition filed and allowed. Other accused present. Both side counsels present.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 3), திரு. **ஜெயபிரகாஷ்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நீதிமன்றத்திற்கு இன்றைக்கு வராதவர்களில் வனத்தெப்பரைத் தெரியும், அவர் இறந்துவிட்டார். ஜெபஸ்தியார், திருமா செழியன், உலக நம்பி ஆகியோர்கள் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை, அவர்களையும் தெரியும். இவ்வழக்கில் அசா. 1 என் பாட்டி, அசா. 2 என் தகப்பனார்.

என் தாத்தா சவரிதாசுக்கும், மைக்கேல் ராஜ் குடும்பத்தினருக்கும இடப்பிரச்சனை சம்மந்தமாக முன் விரோதம் இருந்தது. என் அப்பா வின்செண்ட்டை என் தாத்தா சவரிதாஸ் காவல் நிலையத்திற்கும், தாலுகா அலுவலகத்திற்கும் அழைத்துக் கொண்டு செல்வார். இதனால் மைக்கேல்

ராஜ் என் தகப்பானிடம் அடிக்கடி பிரச்சனை செய்து கொண்டுஇருந்தார். இற்கு உலகநம்பி, மைக்கேல் ராஜூக்கு சப்போர்ட் செய்தார்.

கடந்த 04.12.2010 ம் தேதி மாலை 05.15 மணிக்கு நான், என் தகப்பனார், என் பாட்டி, என் தாயார் ஜெசிந்தா பாக்கியம் ஆகியோர் எங்கள் வீட்டின் வெளியே கட்டில் போட்டுஉட்கார்ந்து கொண்டு இருந்தோம். அப்போது பட்டிவீரன்பட்டி கூட்டு சாலையில் இருந்து கோல்டு கலர் ஆம்னி காரில் (எண். TN 59 M 5757) உலகநம்பி தலைமையில் 10 நபர்கள் கொடிய ஆயுதங்களோடு வந்தார்கள். அவர்கள் உலக நம்பி, திருமா செழியன், மைக்கேல் ராஜ், அருளப்பன், சார்லஸ், இனிக்கோ, சேசு ராஜ், அருள் ஞான பிரகாசம், வனத்தப்பர் மற்றும் செபஸ்தியார் ஆவர்.

அவர்கள் கத்தி, கம்பி , அருவாள், கம்பு ஆகியவற்றைக் கொண்டு வந்து, உலகநம்பி அவர்களிடம் என் தகப்பனாரை காண்பித்து இந்தா இருக்கான்டா வின்சென்ட், இவன் தான்டா அந்த இடத்தை எடுக்க விடமாட்டேன் என்கிறான். இவன் செத்தால் தான்டா அந்த இடத்தை எடுக்க முடியும், இவனை குத்தி கொல்லனும்டா என்று சொல்ல, திருமா செழியன் என் தகப்பனாரின் வலது கையை பிடித்துக் கொள்ள, சார்லஸ் என்பவர் என் தகப்பானரின் இடது கையைப் பிடித்துக் கொண்டார்.

மைக்கேல் ராஜ் என் தகப்பனாரின் வயிற்றை இரண்டு கைகளாலும் பின்னால் நின்று பிடித்துக் கொண்டார். உலக நம்பி என் தகப்பனாரைப் பார்த்து நீ செத்தால் தான்டா எனக்கு நிம்மதி, செத்து தொலைடா நாயே என்று சொல்லி என் தகப்பனாரின் வலது அல்லையில் மேல் பகுதியில், நீதிமன்றத்தில் காட்டப்படும் கத்தியால் குத்தினார்.

அதே கத்தியால் அருள் ஞான பிரகாசம், உலக நம்பியிடம் இருந்து கத்தியைப் பிடிங்கி, செத்து தொலைடா நாயே என்று சொல்லி என் தகப்பனாரின் வலது பக்க அல்லையின் கீழ் வயிற்றில் குத்தினார். நான்

தடுக்க சென்றபோது, திருமா செழியன் என் இடது கையை பிடித்து, முறுக்கி, சுண்டி இழுத்துவிட்டார். அதனால் எனது கை தோள்பட்டை இறங்கி விட்டது. சார்லஸ் என்பவர் என் தலையில் கம்பியால் அடித்தார். தலையில் இருந்து குபு குபுவென இரத்தம் வந்தது. என் தகப்பனாரை அருள் ஞான பிரகாசம் குத்த போனபோது, அதை என் பாட்டி சேசு மேரி தடுக்க போனதால் அவரது வலது கையில் உள்ளங்கை பகுதியில் இரத்த காயம் ஏற்பட்டது.

இனிக்கோ, அருளப்பன், சேசு ராஜ், செபஸ்தியார் என்னை, என் பாட்டியை, என் தாயாரை கம்பால் அடித்தனர். நாங்கள் ஐயோ, அம்மா என கத்தினோம். அக்கம் பக்கத்தில் இருந்து ஆட்கள் ஓடி வந்தார்கள். அப்போது உலகநம்பி, என் தகப்பனாரைப் பார்த்து, வின்சென்டு இன்னைக்கு தப்பித்துவிட்டாய், என்றைக்காவது ஒரு நாள் உன்னை குடும்பத்தோடு கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு, அவர்கள் அனைவரும் வத்தலக்குண்டு பக்கம் சென்று விட்டனர்.

நாங்கள் போக்கு ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு வத்தலக்குண்டு, காவல்நிலையம் சென்றோம். போலீசார் எங்களை மருத்துவமனைக்கு செல்ல சொன்னார்கள். நாங்கள் வத்தலக்குண்டு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தோம். அங்கு வந்து போலீசார் விசாரணை செய்தனர். வழக்கு புகாரை என் பாட்டி கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

R KANAGARAJ Digitally signed by R KANAGARAJ Date: 2025.05.22 19:01:40 +0530